**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(12.04.2025 முதல் 16.04.2025)**

**அறிக்கை எண் 04/2025** **தேதி. 11.04.2025**

## பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரம்பலூர் மாவட்டத்தின் 08.04.2025 முதல் 10.04.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36 - 37 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 77 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 51 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 - 11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட வட கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை பெரம்பலூர் (12.04.2025 முதல் 16.04.2025)

| கடந்த வார வானிலை (08.04.2025 முதல் 10.04.2025) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 16.04.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 08/04 | நாள்-2 09/04 | நாள்-3 10/04 | தேதி | நாள்-1 12/04 | நாள்-2 13/04 | நாள்-3 14/04 | நாள்-4 15/04 | நாள்-5 16/04 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 4 | 2 | 6 | 3 | 4 |
| 36 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 39 | 38 | 37 | 36 | 36 |
| 26 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 29 | 29 | 28 | 28 |
| 4 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 6 | 7 | 6 | 6 |
| 77 | 74 | 72 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 60 | 70 | 70 | 80 |
| 51 | 43 | 38 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| 8 | 9 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 10 | 12 | 12 |
| வட வட கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | மேற்கு தென் மேற்கு | காற்றுவீசும் திசை | மேற்கு தென் மேற்கு | தென் தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் தென் கிழக்கு |

## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 12.04.2025 முதல் 16.04.2025 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 - 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 29 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது** | | வரும் நாட்களில் மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் தேவைக்கேற்ப நீர் பாய்ச்சவும். |
| **நெல்** | **நாற்றாங்கால்** | கோடை பருவத்திற்கு ஏற்ற குறுகிய கால நெல் இரகங்களான ஆடுதுறை 53, ஆடுதுறை 56, ஆடுதுறை 57 மற்றும் ஆடுதுறை 59 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |
| **பயறுவகை பயிர்கள்** | | பயறுவகை பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் தாக்கம் தென்பட்டால் 5 சத வேப்பங்கொட்டை சாறு கரைசலை தெளிக்கவேண்டும். |
| | **அறுவடை** | முதிர்ந்த உளுந்து மற்றும் பாசிபயறு பயிர்களை அறுவடை செய்யவும். |
| **தென்னை** | | தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைத்து கோடையில் மழை நீரை மண்ணில் சேமிக்கவும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **மாடு** | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்கவும். |

## குறுஞ்செய்தி

- வரும் நாட்களில் மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் தேவைக்கேற்ப நீர் பாய்ச்சவும்.
- 11.04.2025 மற்றும் 12.04.2025 ஆகிய நாட்களில் சில பகுதிகளில் வெப்பம் மற்றும் ஈரப்பதமான வானிலை நிலவக்கூடும்.

**இயக்குநர்**